

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், படப்பையில் நடைபெற்ற குன்றத்தூர் மத்திய மற்றும் தெற்கு ஒன்றிய தி.மு.க நிர்வாகிகள் (கிளை செயலாளர்கள் BLA2 BDA) ஆலோசனைக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி "ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல் பணியினை வெற்றிகரமாக நடத்தி முடித்த நிர்வாகிகள் 600 பேருக்கு சிறப்பு பரிசு மற்றும் நிதி வழங்கினார். அருகில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர்கள் இ. மணி, ஏ.வந்தேமாதரம், திருப்பெரும்தூர் தொகுதி பார்வையாளர் பாஸ்கர் சுந்தரம், ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை, எலியட்ஸ் கடற்கரையில், அரசு மனநல மருத்துவமனை சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் மா.சுப்பிரமணியன் நேற்று (14.09.2025) "உலக தற்கொலை தடுப்பு வாரம் நிகழ்ச்சியில் தலைமை தாங்கி தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்றார். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம், அரசு மனநல மருத்துவமனை இயக்குநர் மரு.மாலையப்பன், பேராசிரியர் மரு.பூர்ண சந்திரிகா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலிய மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில்

# "அன்புக்கரங்கள்" திட்டம்! முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்!

## பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியைத் தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை!

**சென்னை, செப். 15 -**

**பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் அக்குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித் தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள்" திட்டம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (15.09.2025) தொடங்கி வைக்கிறார்.**

ஏற்றமிகு தமிழ்நாட்டை உருவாக்கிட, குழந்தைகளின் கல்வி மற்றும் அவர்களின் சீரான வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றது.

மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் "தாயுமானவர்" திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தை களை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், "அன்புக்கரங்கள்" திட்டம் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர, மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்குவதுடன், பள்ளிப் படிப்பு முடித்த பின்னர் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யும் இத்திட்டத்தினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.9.2025 அன்று சென்னை, கலை வாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு உதவித் தொகையினை வழங்கவுள்ளார்கள்.

மேலும், பெற்றோர் இருவரையும் இழந்து 12ஆம் வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள மாணவ / மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் அன்றைய தினம் வழங்கவுள்ளார்கள்.

### சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம் சார்பில் இளைஞர்கள் கருத்தரங்கம்!

## டாக்டர். பொன்ராஜ் வெள்ளைச்சாமி சிறப்புரை! அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு.

சென்னை, செப். 15 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் IDRM இந்திய ஜன நாயக மீட்பு இயக்கத்தின் சார்பில் இளைஞர்களுக்கான மாபெரும் கருத்தரங்கம் இன்று (15-09-25 திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் சென்னை ஏழு கிணறு குளோப் திருமண மண்டபத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி கே சேகர்பாபு முன்னிலையில் IDRM அறக்கட்டளை உறுப்பினர் துரைபாண்டியன் தலைமையில்

தமிழ் நாட்டை முதலீட்டில், வளர்ச்சி பாதையில் நடைபோட வைத்தது யார்? என்ற தலைப்பில் மேனாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அலோசகர்) IDRM Convenorருமான Dr. பொன்ராஜ் வெள்ளைச்சாமி.. அவர்கள் இன்றைய சனநாயக அரசியலின் தமிழ் நாட்டின் பங்கை நிலையைப் பற்றி இளைஞர்களிடையே உரையாற்றுகிறார். இக்கூட்டத்தில் IDRM செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் .சு. குமார் நன்றி கூறுகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன்.எம்.பி.டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல்,அ. வெற்றி அழகன், இ. பரந்தாமன் தலைமைச் செயற்கு உறுப்பினர் பா.ரங்கநாதன், எம் விஜயகுமார், கே. எஸ். ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி.கே. மூர்த்தி, சி.மகேஷ் குமார்,சங்கரி நாராயணன், எஸ். மணிமுடி,கே.எஸ்.எம். நாதன், என் பி எம் ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி, மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், தேவ. ஜவஹர், ஜி எம் தேவன், புனிதவதி எத்திராசன், பகுதி கழகச் செயலாளர்கள் எஸ் ராஜசேகர் எஸ் முரளி ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ. நாகராசன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி. ஆர். நாகராஜ், வே. வாசு, செ. தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள் எம் இப்ராஹிம் கனி, இரா கலைச்செல்வி எஸ். பன்னீர்செல்வம், கோ. மணி, பி. ஜெ. துளசிங்கம் பி. உதயசங்கர்,ரமேஷ் (எ) நீலகண்டன், டி.வி, செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ் குமார்,டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, நிர்மலாதேவி,

வானவில் விஜய் ,பா ஜெகதீஷ், கா. வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தனசேகர். ஆர் டி. சங்கர்நானா,பி ஸ்ரீராமுலு பி விஜயகுமார்,பா.பிரதீப் குமார் எம் விநாயகம் எல் சம்பத் குமார் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர்,ஜி.வி. நாகவல்லி, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், ஜி. தாமோதரன், துரைக்கண்ணன்.எம். பொரோஸ்கான்,ம.அசோக்குமார்,கு.கிருஷ்ணமூர்த்தி,கா. ராஜ்முகமது,து.ஆயிரம், மற்றும்ராஜெஷ்ஜெயின்.எம். சி,வெ.பரிமளம்.எம்.சி,எல். நவீன்.எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி நிர்வாகிகள் மே ஜனார்த்தனன் கே ஆர் அபரஞ்சி மா முத்து குமார் நா சுந்தரம் எஸ் சந்தியாகு தமிழ்வாணன் வி சந்தான லட்சுமி சீபா ஜெயராமன் வட்டக் கழக செயலாளர்கள் மா.ஜெய்ச ங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், டி. சதீஷ்குமார், சேப்பாக்கம்வே.பா. பிரபாகரன், எல். சத்தியநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர். எ.அஸ்லாம், த.கதிரவன், ம.பரத் குமார், க.கவியரசு, ஆ.நா பார்த்திபன் ஜி ராமமூர்த்தி பா அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்

### மதுரவாயல் தெற்கு பகுதியில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

# தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி!

## பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 15-

சென்னை தெற்கு மாவட்டம். மதுரவாயல் தெற்கு பகுதி தி. மு. க சார்பில் இன்று காலை 10.00 மணிக்கு காரம்பாக்கம். சுபம் காம்ளக்ஸ் அருகில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 1000 நபர்களுக்கு இனிப்பு வழங்கி ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள குடும்பத்தினரும் சேர்ந்து " தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டோம் " என்கிற உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பிரனர் எஸ். அருணாச்சலம். பொதுக்குழு உறுப்பினர் வ. செல்வக்குமார் எம். சி. பகுதி கழக நிர்வாகிகள் பி. எம். செல்வராஜ். இரா . பால்பாண்டியன். வே. மதியழகன். எஸ். பாரதி எம். சி. கே. ராஜு எம். சி. அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வி. ராஜேஷ். அ. விஜயபாலா. இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் செ. ரவி. ச. சங்கர்கணேஷ் எம். சி. வட்ட கழக செயலாளர்கள் எஸ். ரமேஷ் ராஜ். த. ரமேஷ். சி. சுந்தர். அ. மோசஸ். ஜெ. பாஸ்கரன். தி. சார்லஸ். ஆ. செல்வம். மாமன்ற உறுப்பினர்கள் செல்விரமேஷ். ஹேமலதாகணபதி. சாந்தி ராமலிங்கம். மாவட்ட பிரதிநிதிகள் இரா ராஜேந்திரன். க. கைலாசம். எம். எல். நாதன்,வி. விஜயன். ஆர். சேகர். ஏ. டி. எத்திராஜ். ஜி. ராமகிருஷ்ணன். கே. நாராயணன். எஸ். ரவி. . ஆர். சிவலிங்கம். கோ. ராமலிங்கம். து. திருநாவுக்கரசு. அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள். வட்ட கழக நிர்வாகிகள். அணிகளின் பகுதி. வட்ட அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள். கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மாதவரம் தெற்குப் பகுதி

# 30 (அ) வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## வட்டச் செயலாளர் டி.சுந்தரம் அறிக்கை!

சென்னை, செப்.15

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 (அ) வட்டக் கழகத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம் அறிவிப்பினை ஏற்று அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி இன்று (15.9.2025) மாலை 4 மணி அளவில் மாதவரம் தொகுதி பாகம் 121 முதல் 128 வரை உள்ளடங்கிய தெருக்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு ஐந்து தீர்மானங்கள் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு 1, லட்சுமிபுரம் ராஜ நகர் 2வது தெரு பிஆர் எச் ரோடு சந்திப்பு. 2 செகரட்டரி காலனி பூங்கா பச்சையம்மாள் நகர் சந்திப்பு. 3. கல் பாளையம் சத்தியமூர்த்தி தெரு. அண்ணா தெரு சந்திப்பு. 4 பெருமாள் கோயில் தெரு குறுக்கு விநாயகபுரம் விநாயகர் கோயில் தெரு 6. சுப்பிரமணியம் நகர் கணேஷ் நகர் திருமால் நகர் ஐயப்பன் நகர் சந்திப்பு 8. பரிமளம் நகர் சூரப்பட்டு ரோடு சந்திப்பு ஆகிய இடங்களில் வட்ட கழக நிர்வாகிகள் வாக்காளர்களின் முகவர்கள் பாக முகவர்களின் இளைஞர்கள் அனைவரும் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்து விட வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றியம் கைவண்டு ஊராட்சி குப்பம்மாள்சத்திரம் கிராமத்தில் கிளை கழக கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர். இதில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரை மீண்டும் ஆட்சியில் அமைத்திட இரவும் பகலும் பாராமல் அயராத உழைப்பும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இதில் கிறிஸ்டி அன்பரசு, எஸ். மகாலிங்கம், ப.சிட்டிபாபு, தா.மோதிலால், பாஸ்கர், நடராஜன், ஆனந்தன், சித்ரா ரமேஷ், லட்சுமணன், தேவேந்திரன், சௌகார் பாண்டியன், வி.எஸ். சதீஷ், எம். எம். லிங்கேஷ், சிவசங்கரி உதயகுமார், ரஜினா மோசஸ், டேவிட் ,விக்ரம்,சுதாகர், துரை பாண்டியன், ராஜா சிங், உஷாராணி, ஆருண், திருத்துவராஜ், சீனிவாசன், உள் பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### சென்னை வள்ளுவர் கோட்டம்: பேரறிஞர் அண்ணா சிலைக்கு முதல்வர் மாலை அணிவித்து மரியாதை!

# சென்னை மாநகர் போக்குவரத்து ஊழியர் முன்னேற்றச் சங்கத்தினர் பங்கேற்பீர்!

## மாநகர போக்குவரத்து சங்க பொதுச் செயலாளர் த.ஆறுமுகம் வேண்டுகோள்!

சென்னை, செப்.15-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்த நாளையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் முதலமைச்சர் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியில் சென்னை மாநகர் போக்குவரத்துக்கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்ள, சங்க பொதுச்செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 117-வது பிறந்த நாளான இன்று (15.09.2025 திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றார்.

அவ்வமயம், தொ.மு.ச. சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின், தலைமை சங்க நிர்வாகிகள், கிளைச் சங்க நிர்வாகிகள், மற்றும் சங்க முன்னோடிகள் பெருந்திரளாக கருப்பு சிகப்புச் சீருடையில் இன்று (15.09.2025) காலை 7.00 மணிக்கு பெருந்திரளாக திரண்டிட வேண்டும் என்று சென்னை மாநகர போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளர் த.ஆறுமுகம் கேட்டுக் கொண்டுள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் சென்னை மாவட்ட அளவிலான 2025ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்டு, அதற்கான பரிசளிப்பு விழா நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்குப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

### தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

# 131வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## வட்டச் செயலாளர் மு.ம. செந்தில் குமார் அறிக்கை!

சென்னை, செப்.15-

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131வது வட்டச் செயலாளர் மு.ம.செந்தில் குமாரின் அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131வது வட்டத்தில் தி.மு. கழக முப்பெரும் விழாவின் ஒன்றான பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.09.2025 திங்கட்கிழமை) காலை 9.00 மணிக்கு வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில், தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி 10வது அவெயுவில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர்நகர் கிழக்கு பகுதி அவை தலைவர் மு.மணிவண்ணன், 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், வட்ட அவை தலைவர் வி.டி.செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஆகையால் கிளை கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, விளையாட்டு அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி,தொழிலாளர் அணி, அமைப்பு சாரா அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் இறகுபந்து போட்டி பரிசளிப்பு விழா மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கட்பீஸ். ப.சோமசுந்தரமூர்த்தி தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் லயாலா.கே.மதன், இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இ.ரவிகுமார், ஆகியோர் வரவேற்புரையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் கலந்து கொண்டு ரூ.50,000 ரொக்க பரிசு மற்றும் வெற்றிக் கோப்பைகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தா.இளையஅருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், என்.மருதுகணேஷ், க.நாகம்மை, சு.சேகர், கி.ராஜேந்திரன், நா.சண்முகம் மற்றும் பகுதி, வட்ட, அனைத்து அணிகளின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக என்.அப்துல்மாலிக், அ.சாந்தகுமார், ஆகியோர் நன்றி கூறினர்.



சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி 186 (அ ) வட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை உறுதுணையாக இருந்த வட்டக் கழகத்தை சேர்ந்த BLA2, BDA யை நிர்வாகிகளுக்கு பரிசு பொருட்களை வட்டச் செயலாளர் இரா.குமாரசாமி ஏற்பாட்டில் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் ஆகியோர் வழங்கினர் . இந்நிகழ்ச்சியில் ஜே. கே. மணிகண்டன் எம்.சி. தே ஜமுலிங்கம், ஈ லட்சுமணன், ஆர் ஜனாதனன், எஸ் வெங்கடேசன், எஸ் லீலாவதி, ஜே. மகேஸ்வரன், எஸ் கோடீஸ்வரன், எம் அரசு, அலுவலகம் எஸ் ஜெய் சிங், செந்தமிழ் செல்வன், எஸ் வசுமதி, உள்ளிட்ட மகளிர்கள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.